# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 68 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.30.06.2018–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 05.07.2018 (வியாழக் கிழமை) அன்று மாலை 05.00 மணியளவில் நடைபெற்றது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 05.07.2018

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**<u>பொருள் – 1</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு பரப்பலாறு நீர் ஆதாரத்தினைக் கொண்டு விருப்பாட்சி தலையூற்று குடிநீர் திட்டம் மற்றும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் முதலானவைகள் செயல்பாட்டில் உள்ளது. இருப்பினும் நகர் பொதுமக்களின் தினசரி குறைந்தபட்ச குடிநீரினை பூர்த்தி செய்ய இயலாத நிலையிலும் எதிர்கால நகர விரிவாக்கம் மற்றும் மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப புதிய குடிநீர் ஆதாரத்தை தோற்றுவிக்கும் பொருட்டும், பரப்பலாறு அணையினை நீராதாரமாக கொண்டு கூடுதல் குடிநீர் திட்டம் வகுக்கவும், நகர் பகுதிக்குள் கூடுதல் மேல் நிலைத் தொட்டிகள் அமைத்து 1 முதல் 18 வார்டுகளுக்கும், மாவட்ட அளவீட்டு பகுதிகளாக (DMA) வடிவமைத்து விநியோகிக்கும் பொருட்டு கிளை பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய்கள் பதிக்க ஆய்வுகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம், சென்னைக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி நிறுவனத்திடமிருந்து 29.06.2018 ஆம் நாள் வரப்பெற்ற கடிதத்தில் குடிநீர் ஆதாராத்தை மேம்படுத்துவதற்கும் நகர் பகுதிக்குள் மேல் நிலை தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோகத்தினை சீர் செய்யும் பொருட்டு விரிவான கள ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு புதிய குடிநீர் ஆதாரம், மேல் நிலைத் தொட்டிகள் மற்றும் 18 வார்டுகளுக்கும், கிளை பிரதான மெயின் மற்றும் பகிர்மான குழாய்கள் அமைத்து சீரான முறையில் குடிநீர் வழங்க மேம்பாட்டுப் பணிகளுக்கான திட்ட அறிக்கை தயார் செய்து வழங்கிட தொழில்நுட்ப கலந்தாலோசனை கட்டணம் உள்பட (சேவை வரி நீங்கலாக) ரூ.35.00 இலட்சம் வழங்க கேட்டு வரப்பெற்ற கடிதம் தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. நகரின் விரிவாக்கம் மற்றும் எதிர் கால மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்துவது அவசியமானதாக உள்ளதாலும், திட்ட அறிக்கை தயார் செய்ய மேற்படி நிறுவனம் ஆய்வறிக்கைக்கு 15 நாட்கள் 30% தொகை, ஆரம்பகட்ட திட்ட அறிக்கை, வரைவு, மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் பணிக்காக 90 நாட்கள் 50% தொகை மற்றும் இறுதிகட்ட பணிகள் 120 நாட்கள் 20% முதலான தொகைகளை வழங்கவும், ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்தி மேற்படி பணிகள் நிறுவனம் மூலம் ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், மேற்படி பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு சமர்ப்பிக்க அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 132**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் – 2</u>**

அ.ஒட்டன்சத்திரம் நகராட்சியின் அத்தியாவசிய பணியிடங்களாக மேலாளர், நகராட்சி பொறியாளர், பணி ஆய்வர், வருவாய் ஆய்வாளர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.04.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்குக்கும் வைக்கப்படுகிறது.

ஆ. மேற்படி அரசாணையின்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.11417/2018/கே3 நாள்.08.05.2018–ன்படியும், மேலூர் நகராட்சியிலிருந்து இந்நகராட்சிக்கு பணியிடமாறுதலில் வந்த திரு.ப.செந்தில்குமார் வருவாய் ஆய்வாளர் அவர்கள் பணி மாறுதல் பயணப்படியாக ரூ.3565/–க்கான பட்டியல் சமர்ப்பித்துள்ளார். பட்டியலில் கண்ட தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. பதிவு செய்யலாம்.
2. அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 133**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணியில் மக்கும் குப்பைகளை மக்க வைப்பதற்கு தற்போது சாணக் கரைசல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. MCC (Micro Compost Center) –ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் போது சாணக் கரைசல் பயன்படுத்தினால் குப்பைகளை மக்க செய்ய 60 முதல் 75 நாட்கள் ஆகும் என்பதால் 30 நாட்களில் மக்கும் குப்பைகளை விரைவாக மக்க செய்யும் தன்மை கொண்ட EM Solution 500லிட்டர் மற்றும் ஈக்கள் கட்டுப்படுத்தும் Novan மருந்து 50 லிட்டர் , EM Solution கரைசல் மற்றும் நாட்டுச்சக்கரை 200 கிலோ முதலானவைகள் கொள்முதல் செய்ய வாங்க உத்தேச செலவினம் ரூ1.00 லட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பொருட்களை கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 134**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–4**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான TN 57 AW 4037 பெலிரோ வாகனம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனதால், வாகனம் இயக்க சிரமமாக உள்ளதாகவும், இயக்கும்போது வாகனத்தில் என்ஞ்சின் பழுது ஏற்பட வாய்ப்புள்ளதால், Mahendra Company நேரடி டீலர் பணிமனையில் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள பெறப்படும் பட்டியல் தொகை நேரடியாக வழங்க தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு,

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனத்திற்காகும் பழுது நீக்கப்பணி செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 135**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 5**

மாவட்ட ஆட்சித்தலைவர், திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 1957/2018/அ5 நாள்.14.06.2018 –ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2018–2019ம் நிதியின் கீழ் 3வது வார்டு வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிகளுக்காக 03.07.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. பி.வேலுச்சாமி | 0.06 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.பி.எஸ்.ஸ்டாலின் | 2.67% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள ஒப்பந்ததாரரிடம் இருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவர் 0.06% மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு. பி.வேலுச்சாமி என்பவரின் 0.06 மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை அனுமதிக்கலாம். (ந.க.எண். 51/2017/இ1)

**தீர்மான எண். 136**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–6**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான தலையூத்தில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டு மக்களுக்கு சீரான முறையில் குளோரின் கலக்கப்பட்டு மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. Gas Chlorine (900 kg) சிலிண்டர் அவ்வப்போது வாங்கிக்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சம் தனிஅலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. சூமற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். ஆவசர அவசியம் கருதியும், பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்க அவசியம் கருதியும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 137**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17வது வார்டு ஏ.பி.பி நகர் – தாராபுரம் சாலை சந்திப்பில் ஏற்கனவே உள்ள RCC குழாய் பாலம் சிதலமடைந்து பொத மக்களின் வாகன போக்குவரத்திற்கு மிகுந்த இடையூறாக உள்ளது. அப்பகுதியில் அரசு மருத்துவமனை, அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் கால்நடை மருத்துவமனை ஆகியவை அமைந்துள்ள பிரதான சாலையாக உள்ளதால், புதிதாக RCC குழாய் பாலம் அமைத்திட ரூ.70,000/– க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தனி அலுவலர் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
2. ஆவசர அவசியம் கருதியும், வாகன போக்குவரத்து மிகுந்த சாலை என்பதால், மேலும் காலதாமதம் ஆவதனை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 138**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் – 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு துப்புரவு பணி மேற்கொள்ள போதிய முன்னேற்பாடுகளுடன் பணி செய்ய ஏதுவாக ஆண்டுக்கு இரண்டு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்க வேண்டியுள்ளதால், 2018–2019–ம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்கள் கீழ்க்காணும் பட்டியலில் உள்ளவாறு கொள்முதல் செய்துகொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

| வ.எண் | பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கம்பூட்ஸ் (30– ஜோடிகள்) | 60 எண்ணம் |
| 2 | கையுறை (60 ஜோடிகள்) | 200 எண்ணம் |
| 3 | முகவுறை (Surgical Use and throw face mask) | 5000 எண்ணம் |
| 4 | முகவுறை (Air Metal face metal mask) | 50 எண்ணம் |
| 5 | தலைக்கவசம் (Head cap) | 100 எண்ணம் |
| 6 | ஒளிரும் சட்டை (Reflect Jacket) (60 ஜோடிகள்) | 200 எண்ணம் |
| 7 | மழைக் கோட் (Rain Coat) | 167 எண்ணம் |

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 139**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் – 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் குடியிருப்பு, வணிகம், கல்வி கூடங்கள், தனியார் மருத்துவமனைகள், அரசு சார்ந்த மற்றும் அரசு கட்டிடங்கள் என 1 முதல் 18 வார்டு பகுதிகளில் சுமார் 12000 வரிவிதிப்புகளும் 8 கி.மீ. தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையும் 59.600 சிமிண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளும் 56.40 கி.மீ. நீளம் கழிவுநீர் வடிகால்களும் 6.50 கி.மீ. மழைநீர் வடிகால் ஒடைகளும் அமைந்துள்ளன. இவற்றில் அன்றாட துப்புரவு பணிக்கு தேவையான தளவாடப்பொருட்கள் 2018–2019–ம் ஆண்டில் வாங்கப்பட்டது. தற்போது அடிப்படை பணிக்கு தேவையான தளவாடப்பொருட்கள் ஏதுமில்லாததால், துப்புரவு பணியில் தொய்வு ஏற்படும் நிலை உள்ளது. துப்புரவு பணியில் தேக்கம் இல்லாமல் சிறப்பாக செயல்பட கீழ்க்கண்ட பொருட்களை அதற்கெதிரே குறிப்பிட்ட எண்ணிக்கையில் மேற்படி தளவாட சாமான்களை வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

| வ.எண் | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெரிய மண்வெட்டி | 50 எண்ணம் |
| 2 | சிறிய மண் வெட்டி (பெரிய களைகொத்து) | 100 எண்ணம் |
| 3 | கடப்பாறை | 10 எண்ணம் |
| 4 | சாக்கடை சுரண்டி | 50 எண்ணம் |
| 5 | சாக்கடை பல் கொக்கி | 50 எண்ணம் |
| 6 | சாக்கடை கை பல்கொக்கி | 200 எண்ணம் |
| 7 | பெரிய கூட்டுமிலார் | 500 எண்ணம் |
| 8 | தென்னைமார் | 2000 எண்ணம் |
| 9 | அன்னக்கூடை | 200 எண்ணம் |
| 10 | கை தகரம் | 200 எண்ணம் |
| 11 | அரிவாள் | 25 எண்ணம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 140**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்–10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொதுசுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை பணியில் மக்கும் குப்பைகளை மக்க வைப்பதற்கு தற்போது சாணக் கரைசல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. MCC (Micro Compost Center) –ல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் போது சாணக் கரைசல் பயன்படுத்தினால் குப்பைகளை மக்க செய்ய 60 முதல் 75 நாட்கள் ஆகும் என்பதால் 30 நாட்களில் மக்கும் குப்பைகளை விரைவாக மக்க செய்யும் தன்மை கொண்ட EM Solution 500லிட்டர் மற்றும் ஈக்கள் கட்டுப்படுத்தும் Novan மருந்து 50 லிட்டர், EM Solution கரைசல் மற்றும் நாட்டுச்சக்கரை 200 கிலோ முதலானவைகள் கொள்முதல் செய்ய வாங்க உத்தேச செலவினம் ரூ1.00 லட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி பொருட்களை கொள்முதல் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண். 141**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்–11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் பொதுசுகாதாரம், குடிநீர் மற்றும் தெருவிளக்கு சாமான்கள் மற்றும் பிற இனங்களில் உள்ளவைகளை அலுவலக வளாகத்தில் பாதுகாப்பற்ற நிலையில் நீண்ட நாட்களாக உள்ளதால், அவைகளை பொது ஏலத்தில் விற்பனை செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. அனுமதிக்கலாம்.
2. அனைத்து பிரிவுகளிலும் பயன்பாடின்றி உபயோகமற்ற நிலையில் உள்ள பொருட்கள் அனைத்தையும், பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கழிவு செய்யவும், அதற்கான விளம்பர அறிவிப்பு முதலான செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 142**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள்–12</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018–ல் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–19–க்கு இந்நகராட்சிக்கு ரூ.1500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சாலைப் பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் கட்டிட மதிப்பீடுகள் தயார் செய்து, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்திட கள ஆய்வு நடத்தி சாலைகளை அளவீடு செய்தல், புகைப்படங்கள் எடுத்தல், வரைபடங்கள் தயார் செய்தல், நடப்பு ஆண்டு விலை விகிதத்திற்கு மதிப்பீடு தயார் செய்தல், தமிழ்நாடு திறந்தநிலை ஒப்பந்தப்புள்ளி சட்டவிதிகளின்படி, ஒப்பந்தப்புள்ளி நமூணாக்கள் நிபந்தனைகளுடன் தயார் செய்தல் போன்ற பணிகளை ஒருங்கிணைத்து நிர்வாக அனுமதிக்கு ஐந்து பிரதிகளும், தொழில்நுட்ப அனுமதி பெற்றிட மூன்று பிரதிகள் தயார் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான தொழில்நுட்ப பணியாளர்கள் இல்லை.

ஏனவே மேற்காணும் திட்ட மதிப்பீடுகளை தயார் செய்திட தொழில்நுட்ப கலந்தாலேசகர் நியமணம் செய்திடவும், அதற்கான செலவினத் தொகை ரூ.3.75 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துகொள்ளஅனுமதிக்கலாம்.
2. ஆவசர அவசியம் கருதியும், குறித்த காலத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பித்து, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியும், பெற வேண்டியுள்ளதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி, நடவடிக்கை தொடர்ந்துள்ளதையும், மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண். 143**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்:1 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உரக்கிடங்கு இல்லாத நிலையில் இயற்கை முறையில் மக்கும் குப்பைகளை தனியாக பிரித்து Barrel Compost Method முறையில் பணி செய்ய Citizen Social Responsibility பங்களிப்பு நிதியில் (விரலி நெய், கிருஷ்ணா மேல் நிலைப் பள்ளி, திரு.பாண்டியராஜன் மற்றும் இந்தியன் வங்கி) ஆகியோா் 300லிட்டர் கொள்ளளவு கொண்ட 130 பேரல் இலவசமாக மக்கள் பணிக்காக நகராட்சிக்கு வழங்கியதை திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் பொருட்டு (Barrel Compost Method) துளையிட்டு மூடி திறக்கும் வகையில் பூட்டு மற்றும் வளையம் அமைத்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/– தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார திடக்கழிவு மேலாண்மை பணிக்காகும் செலவினத் தொகையை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 144**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் –14**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் நடைபெற்ற திட்டபணிகளை தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சாதனை சிறப்பு மலராக கீழ்க்காணும் தினசரி நாளிதழ்களில் வெளியிடு செய்தமைக்காக கீழ்காணும் நாளிதழ் நிறுவனங்களிலிருந்து வரப்பெற்றுள்ள பட்டியல் அனுமதிக்கு.

| வ. எண் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | மக்கள் நேச காவலர் குரல் | ரூ.8500/– |
| 2 | அரசியல் ஒற்றன் | ரூ.9800/– |
| 3 | உரிமை குரல் (தினசங்கு) | ரூ.9800/– |

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்
2. தமிழக அரசின் ஓராண்டு நிறைவு சாதனை சிறப்பு மலராக தினசரி நாளிதழ்களில் வெளியீடு செய்தமைக்கான செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 145**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–15**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை–2016 விதிகளின்படி மக்கும் மக்காத குப்பைகளை வீடு வீடாக பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நிரந்திர உரக்கிடங்கு ஏதுமில்லாத நிலையில் குப்பைகளை உரமாக்கிடும் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. இந்நிலையில் குப்பைகளை உரமாக்கிட நாகணம்பட்டி பூங்கா பகுதி எரிவாயு தகன மேடை வளாகப் பகுதி ஆகிய இடங்களில் Onsite Composting facility வசதிகள் செய்யப்பட்டு நுண் உரம் தயாரிக்கும் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிரித்து வாங்கும் பிளாஸ்டிக் குப்பைகளை விற்பனை செய்தது போக, எஞ்சியுள்ளவைகளை அரைத்திடவும், மக்கும் குப்பைகளை உரமாக்கிட சிறு துகள்களாக அரைத்திடவும், இயந்திரங்கள் தேவைப்படுகிறது.

மேற்படி பணிக்கு தேவையான Plastic Shredder Machine க்கு ஒரு எண்ணமும் Bio-Shredder Machine ஒரு எண்ணமும் வாங்கிடவும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம் தனி அலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதிக்கலாம்
2. பணியின் அவசர அவசியம் கருதியும், பிளாஸ்டிக் குப்பைகள் நுண் துகள்கள் ஆக்கி, சாலைப்பணிகளுக்கு பயன்படுத்திக்கொள்ளவும், இடத்தேவையினை குறைத்திடவும், மக்கும் குப்பைகளை உரமாக்கும் பணிகளை தீவிரப்படுத்தி குறைந்த நாளில் உரம் தயார் செய்திடவும், இயந்திரங்கள் அவசியம் தேவைப்படுவதால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி, நடவடிக்கை தொடர்ந்ததையும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 146**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள்–16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தாராபுரம் சாலையில் இருந்து ஏ.பி.பி நகர் செல்லும் சாலை சந்திப்பில் அமைந்துள்ள குழாய் பாலம் சிதலமடைந்துள்ளதை மாற்றி அமைக்கும் பணிக்காக ரூ.70000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலர் அவர்களால் 25.06.2018 முன்அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கா 03.07.2018 நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.ரெங்கசாமி | 0.03% மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு.ஆர்.அய்யாவு | 5.04% மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1–ல் உள்ள ஒப்பந்தாரரிடமிருந்து மட்டும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு திரு.ஆர்.ரெங்கசாமி என்பவரின் மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி தனி அலுவலரின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.ரெங்கசாமி என்பவர் ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகித்தை ஏற்று தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் ஏற்கலாம்.

**தீர்மான எண். 147**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் –17</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி **2017–18** ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பசுமை உரக்குடில் அமைக்கும் பணிக்களுக்கு தேவையன மக்கும் குப்பைகளை சேகரம் செய்திட நான்கு சக்கர வாகனம் வாங்கிக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.4235/2018/பி3 நாள்.07.02.2018 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து **16.05.2018** ம் தேதியில் இருஉறை ஒப்பந்தப்புள்ளி முறையில் இரண்டாவது முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 16.05.2018 தொழில்நுட்ப தகுதி ஒப்பந்தப்புள்ளி | 06.06.2018 விலைவிகித ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|---|
| 1 | வெற்றி மோட்டார்ஸ்,<br>Dealer for TATA Motors,<br>4/108, காட்டுபுளி நகர்,<br>சமயநல்லூர் பைப்பாஸ்,<br>மதுரை | தகுதிகள் நிறைவு செய்கிறது | 22,32,268/–<br>4 எண்ணிக்கை வாகனங்களுக்கு<br>(TATA ACE வாகனம்) |
| 2 | எம்/எஸ்.லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>சேலம் மெயின் ரோடு,<br>மேட்டூர் அணை | தகுதிகள் நிறைவு செய்கிறது | 22,48,000/–<br>4 எண்ணிக்கை வாகனங்களுக்கு<br>(TATA ACE வாகனம்) |
| 3 | கே.வி.கே ஆட்டோ டீசல் ஒர்க்ஸ்,<br>கே.வி.கே காம்ப்ளக்ஸ், கல்லராம்பட்டி மெயின் ரோடு,<br>சேலம். | தகுதிகள் நிறைவு செய்கிறது | 22,80,000/–<br>4 எண்ணிக்கை வாகனங்களுக்கு<br>(TATA ACE வாகனம்) |
| 4 | கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட்,<br>எண்.39/2 எம்.எம்.பிரதர்ஸ் தோட்டம்,<br>டெலிகாம் கம்பெனி பின்புறம்,<br>சேலம்–5. | தகுதிகள் நிறைவு செய்கிறது | 22,39,600/–<br>4 எண்ணிக்கை வாகனங்களுக்கு<br>(PIAGGIO MODEL VEHICLE வாகனம்) |

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் TATA ACE வாகனத்திற்கு குறைந்த விலை விகிதம் வரிசை எண்.1 நிறுவனம் அளித்துள்ளதும், வாகனத்திற்கு வரிசை எண்.4 நிறுவனம் அளித்துள்ளதும், தனி அலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. PIAGGIO MAKE வாகனங்களின் செயல்திறன் இழுவைத்திறன் டீசல் செலவினம் மற்றும் பராமரிப்பு செலவினம் அதிகம் ஏற்படும் என்ற காரணத்தால், அதனைத் தவிர்த்து TATA ACE BSIV மேம்பட்ட திறன் மற்றும் பராமரிப்பு செலவு குறைவு என்பதால் மேற்படி வாகனத்தை வாங்கிடவும், அதற்கு குறைந்த விலை விகிதம் அளித்துள்ள வெற்றி மோட்டார்ஸ், மதுரை நிர்வன விலை விகிதத்தினை ஏற்கலாம்

**தீர்மான எண். 148**

அனுமதிக்கப்பட்டது.

இடம். ஒட்டன்சத்திரம்.
நாள். 05.07.2018

தனிஅலுவலர்
மற்றும் ஆணையாளர்,
ஒட்டன்சத்திரம் நகராட்சி.